Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
**C.C.No.1/2014**

**Deposition of witness for: PW - 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | பழனிக்குமார் | **Father/Husband Name** | : | அழகர் |
| **Age** | | | **Calling** | : | |
| **Date** | : | **07.07.2025** | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of July 2025.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது)**

**1)** நான் தற்போது மேலப்பதினெட்டாங்குடியில் வசித்து வருகிறேன், விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். வழக்கின் மற்ற எதிரிகளைத் தெரியும். 09.11.2005ம் தேதி எங்கள் மேலூர் அரசு கலைக் கல்லூரியில் விளையாட்டு விழா நடைபெற்றது. 11.11.2005ம் தேதி 5000 மீ ஓட்டப்பந்தயம் நடைபெற்றது. அந்தக்கல்லூரியில் நடைபெற்ற விளையாட்டுவிழாவில் நானும் ஒரு போட்டியாளராக கலந்து கொண்டேன். அன்றையதினம் ஓட்டப்பந்தயம் முடிந்தவுடன், ராஜேந்திரபிரசாத், சிலம்பரசன் ஆகியோருக்கிடையே சண்டை நடந்ததாக கேள்விப்பட்டேன். மறுநாள் காலையில் வழக்கம்போல கல்லூரி நடைபெற்றது, நானும் கல்லூரிக்கு சென்றேன். கல்லூரி நிர்வாகம் 11.11.2005ம் தேதி கல்லூரியில் நடைபெற்ற பிரச்சனை காரணமாக, காலவரையின்றி கல்லூரி மூடப்படுவதாக அறிவித்திருந்தார்கள்.

2) அதனால், எனது நண்பர்கள் எல்லாம் கல்லூரியிலிருந்து கல்லூரியின் மேற்கு பக்கம் உள்ள மைதானம் வழியாக தனியாக சென்று கொண்டிருந்தோம். சிறிது நேரத்தில் நான்கு, ஐந்து நபர்கள் சேர்ந்து அடித்துக்கொள்ளும் சப்தம் எனக்கு கேட்டது. நான் உடனே வேகமாக ஓடிச்சென்று பார்த்தபோது, கரிகாலன், சுந்தரபாண்டி, பிரித்விராஜன், முருகன், தினேஷ்குமார் இவர்களையெல்லாம் சுமார் 5, 6 நபர்கள் கத்தி, அருவாள் வைத்து வெட்டுவதை பார்த்தேன். அந்த 5, 6 நபர்களில் தெற்குத்தெருவை

சேர்ந்த ஆறுமுகம், கச்சராம்பட்டியை சேர்ந்த முருகன், எங்கள் கல்லூரியில் படித்த ராஜேந்திரபிரசாத், தவமணி, செல்லப்பாண்டி, சிலம்பரசன், ராஜ்குமார், காத்தமலைச்சாமி இவர்களையெல்லாம் எனக்குத் தெரியும்.

3) நானும், எனது நண்பர்களும் சத்தம் கேட்டு ஓடியதும், அவர்களும் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். பின்னர் சம்பவத்தில் சுந்தரபாண்டி, கரிகாலன், பிரிதிவிராஜன், முருகன், தினேஷ் ஆகியோர்களுக்கு வெட்டுக்காயங்கள் ஏற்பட்டிருந்ததை நாங்கள் பார்த்து, அவர்களை 108 ஆம்புலன்சில் அழைத்துச்சென்று மேலூர், அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். அவர்கள் மேலூர், அரசு மருத்துவமனையில் சுமார் 4, 5 நாட்கள் உள்நோயாளிகளாக சிகிச்சையில் இருந்தனர். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) என்னை போலீசார் விசாரித்தபோது முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களைத்தான் நான் சொன்னேன் என்றால், சரிதான். இந்த வழக்கிற்கு முன்பாகவே என் தரப்பினர்களான சுந்தரபாண்டி, கரிகாலன், பிரிதிவிராஜன், முருகன், தினேஷ் உள்ளிட்ட 11 நபர்கள் மீது, மகேந்திரன் என்பவரை தாக்கி, அவரை ஜாதி ரீதியாக பேசியதில், அவர் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால், சரிதான். எங்களுடைய தரப்பினர்கள் தாக்கியதில் மேற்படி மகேந்திரன் என்பவர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் இருந்தார் என்றால், மருத்துவமனையில் இருந்தார் என்று தெரியும், ஆனால் ஆபத்தான நிலையில் இருந்தார் என்றால் தெரியாது.

2) அதேபோல் 12.02.2005ம் தேதியன்று எங்கள் தரப்பினர்களை கைது செய்ய வேண்டும் என்று கூறி, தலித் சமூகத்தினை சேர்ந்த மகேந்திரனின் தரப்பினர்கள் கல்லூரியில் கதவுகளை மூடிக்கொண்டு, உள்ளிருப்பு போராட்டம் நடத்தினார்கள் என்றால், எனக்குத் தெரியாது. அதே போல், மேலூர் அரசு கலைக்கல்லூரியின் நுழைவு வாயில் திருச்சி–மதுரை ரோட்டில், வடக்குபுறமாக அமைந்துள்ளது என்றால், சரியல்ல, மேற்குப்பக்கம் நுழைவு வாயில் உள்ளது. எங்கள் கல்லூரிக்குள் வருவது, போவதற்கு எல்லாம் அந்த நுழைவு வாயிலை பயன்படுத்தியே வருவார்கள் என்றால், சரிதான். நான் சொல்லக்கூடிய 12.02.2005ம் தேதிக்கு முந்தையநாளே எங்கள் கல்லூரி

காலவரையின்றி மூடப்பட்டது எனக்கு தெரியுமா என்றால், தெரியாது அன்றையதினம் காலையில் தான் தெரியும். எனக்கு ஏற்கனவே கல்லூரி காலவரையின்றி மூடப்பட்ட விவரம் தெரியும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. அதேபோல், நான் கல்லூரிக்கு 12.02.2005ம் தேதி எத்தனை மணிக்கு கல்லூரிக்கு சென்றேன் என்றால், காலை 09.30க்கு சென்றேன்.

3) நான் கல்லூரிக்கு சென்றவுடன் கல்லூரி காலவரையின்றி மூடப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால், தெரியாது. எப்போது தெரியும் என்றால், 10.00 மணிக்கு தெரியும். உடனே கிளம்பி வீட்டிற்கு சென்றுவிட்டேனா என்றால், 10.30, 11.00 மணிக்கு கிளம்பினேன். நான் கல்லூரியில் எந்தத்திசையை நோக்கி எனது வீட்டிற்கு சென்றேன் என்றால், கல்லூரி மைதானம் வழியாக வந்தேன். அந்த மைதானம் 50 ஏக்கர் இருக்குமா என்றால், சரிதான். நான் பதினெட்டாங்குடிக்கு கல்லூரியில் இருந்து எந்த திசையில் வந்தேன் என்றால், மேற்கு திசையிலிருந்து வந்தேன். நான் பதினெட்டாங்குடிக்கு மேற்குதிசையில் செல்ல தேவையில்லை என்றால், வீட்டிற்கு குறுக்கு வழியில் நடந்து சென்றேன்.

4) நான் அவ்வாறு வரும்பொழுது எவ்வளவு தூரத்தில் சண்டை நடந்ததை பார்த்தேன் என்றால், சுமார் 200 மீட்டர் தூரம். திறந்த நீதிமன்றத்திலிருந்து மெயின் ரோடு வரை இருக்குமா என்றால், அதை விட தூரமாக இருக்கும். அவ்வளவு தூரத்தில் நான் இருந்தபோது, யார் யார் என்ன பேசிக்கொண்டார்கள், என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால், சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக என்னை மேலூர் போலீசார் எங்கு வைத்து, எவ்வளவு நேரம் விசாரித்தார்கள் என்றால், சம்பவம் நடைபெற்ற தினமே, மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள்.

5) நான் சம்பவத்தில் காயம்பட்ட நபர்களை மருத்துவமனையில் சேர்க்கவில்லை என்றால், நான்தான் மருத்துவமனையில் சேர்த்தேன். நான் சொன்னதுபோல், சொன்ன தேதியில், சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை, வழக்கு சம்பவத்தை நான் பார்க்கவில்லை, என் மேல் வழக்கு இருந்ததால் நான் எதிரிகள் சம்பவத்தில் ஈடுபட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.